# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.2201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

மனு எண் : 0318/ஊராட்சி/2017

ஆணை எண் : 037/2017

நாள் : 23.03.2017

T. ரிஸ்ரின் பானு, – மனுதாரர்
4/139, பள்ளி வாசல் தெரு,
இராஜகம்பீரம் PO,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

வட்டார வளர்ச்சி அலுவலர்,
மானாமதுரை ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், இராஜகம்பீரம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. T. ரிஸ்ரின் பானு என்பவருடைய 07.03.2017 நாளிட்ட மனுவில், அவருக்கு சொந்தமான சர்வே எண்.115/6B-ல் உள்ள இடத்தில் ஊராட்சி மன்ற அனுமதி பெறாமல் தன்னிச்சையாக குடிநீர் பைப்லைன் எடுத்து சட்ட விரோதமாக அனுபவித்து வரும் சோனை என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மானாமதுரை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மனுக்கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், திரு. சோனை மற்றும் கருப்பாயி ஆகியோர்கள் இன்று வரை வைப்பு தொகை செலுத்தாமலும், குடிநீர் கட்டணம் செலுத்தாமலும் குடிநீர் பிடித்து அனுபவித்து வருகிறார்கள் என்றும் அதிகாரிகள் இவர்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு, நடவடிக்கை எடுப்பதில்லை எனத் தெரிவித்து அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு முறைகேடாக அமைக்கப்பட்டுள்ள பைப்லைனை துண்டிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)– ன் படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம் முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பபடுகிறது. மேலும் இப்பொருள் குறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
திருமதி. T. ரிஸ்ரின் பானு,
க/பெ-தாஜ்முகைதீன்,
4/139, பள்ளி வாசல் தெரு,
இராஜகம்பீரம் PO - 630 609

நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை மாவட்டம்,
சிவகங்கை.